# ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசு நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு!

ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது!, என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் மாகாணசபைத் தேர்தலையும் பிற்போட்டு அரசாங்கம் ஏற்கனவே மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளது.

இந்த நிலையில், அடுத்தாண்டு செப்டம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது. இந்தத் தேர்தலைப் பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. இதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டால் நாம் அனைத்துத் தரப்பினருடனும் ஒன்றிணைந்து எதிர்ப்பினை வெளியிடுவோம்.

அரசாங்கத்திற்குத் தேர்தல் ஒன்று தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால், மக்கள் தேர்தலொன்றை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (04)




# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 29 திங்கட்கிழமை 16.10.2023 கதிர் 93



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## யாழ்.சிறையில் நூற்றுக்கும் மேற்பட்டோருக்குக் கண் நோய்!

யாழ் சிறைச்சாலையில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்குக் கண் நோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விளக்கமறியல் கைதிகள் மற்றும் தண்டனை கைதிகள் உள்ளிட்டவர்களுக்குக் கண் நோய் பரவியுள்ளது.

இந்நிலையில், கண் நோய்ப் பாதிப்புக்கு உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி, நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04)

## யாழ் காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை தகவல் தொழிநுட்பப் பல்கலைக்கழகமாகிறது

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி மாளிகையானது தகவல் தொழிநுட்பப் பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கைத் தகவல் தொழிநுட்ப நிறுவனத்திற்கு (SLIIT) சுமார் 50 வருடங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது.

இதன் முதலீட்டு மதிப்பு அண்ணளவாக 5,000 பில்லியன் ரூபாவாகும். கனேடிய முதலீட்டாளருடன் இணைந்து இலங்கைத் தகவல் தொழிநுட்ப நிறுவனம் 2➤



## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரிகள் இருவர் இராஜினாமா

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் இருவர் திடீரெனத் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் விற்பனை மற்றும் நிதித் துறைகளில் பணியாற்றிவந்த தலைவர்கள் உட்பட பல அதிகாரிகள் தமது பதவியை இராஜினாமாச் செய்து வருகின்றனர்.

இவ்வாறு இராஜினாமாச் செய்தவர்களில் பெரும்பாலானோர் வேறு வேலைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதன்காரணமாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தகவல் கசிந்துள்ள 2➤

## பாலஸ்தீன மக்களுக்கான தனது ஆதரவை தூதரகம் சென்று வெளிப்படுத்திய மஹிந்த

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்துக்கு இடையில் தீவிர போர் நடைபெற்று வரும் பின்புலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, கொழும்பிலுள்ள பாலஸ்தீன தூதரகத்துக்கு இன்று சென்று தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், இஸ்ரேல் - பாலஸ்தீன விவகாரத்தில் பாலஸ்தீனத்துக்கான ஆதரவையே வெளிப்படுத்தியிருந்தார்.

பாலஸ்தீனத்துக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவியையும் மஹிந்த ராஜபக்ச 2014ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் வழங்கியிருந்தார்.

பாலஸ்தீனத்தின் நீண்டகால ஆதரவாளராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இருந்து 2➤



## பெரும்போகத்தை ஆரம்பிக்கும் முன்பாகவே விவசாயிகளுக்கு உர விநியோகம் நடக்கும்!

### அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதியளிப்பு



பெரும்போகப்பயிர்செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்திற்கான வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விவசாய அமைப்புகள் அனைத்தையும் சந்தித்து நான் கலந்துரையாடியுள்ளேன்.

உரங்கள் மற்றும் எரிபொருட்கள் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறுமா? என்பது விவசாயிகளுக்கு இருக்கும் பிரதான பிரச்சினையைக் காணப்படுகின்றது. கடந்த போகத்திலும் அவர்கள் வைத்த நம்பிக்கையை நாங்கள் உறுதிப்படுத்தினோம். மூன்று வகையான உரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கியதன் ஊடாக 2➤

## இந்தியப் பிரதமர் பதில் அனுப்பாத காரணம் சுமந்திரனுக்குத் தெரிந்திருக்கும் - சி.வி. கருத்து

இந்தியப் பிரதமரிடம் கடிதம் சென்றடைந்தது என்பது சுமந்திரனுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் எனில், எதற்காக இந்தியப் பிரதமர் அந்தக் கடிதத்திற்குரிய பதிலை அனுப்பவில்லை என்ற கேள்விக்கும் அவரே பதில் சொல்ல வேண்டும், என நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

எனக்குத் தெரிந்தவரையில் இந்தியப் பிரதமருக்குத் தமிழ்க் கட்சிகள் அனுப்பிய கடிதமானது இன்னும் அவரைச் சென்றடையவில்லை என்று தகவல் கிடைத்தது.

சுமந்திரன் சொல்வதுபோல் கடிதம் இந்தியப் பிரதமரிடம் சென்றடைந்திருந்தால், அதற்குரிய பதில் கடிதத்தினை இந்தியப் பிரதமர் அனுப்பாததற்கு ஏதேனும் காரணம் ஒன்று இருக்க வேண்டும்.



அது ஒரு இடத்தில் தேங்கி நிற்பதாகவும் பிரதமரிடம் சென்றடையவில்லை, என வும் என்னிடம் கூறப்பட்டது.

இந்தியப் பிரதமருடைய காரியாலயத்திற்குச் செல்லும் கடிதங்கள் யாவற்றிற்கும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் பதில் எழுதப்படும் எனக் கூறப்பட்டது. அவ்வாறான பதில் வராததை 2➤

# ஜனாதிபதி மாளிகையை கொடுக்காதீர்கள் அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம் கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை நீண்டகால குத்தகை என்ற பெயரில் தென் இலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு வழங்கக்கூடாது, என அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

கீரிமலை - காங்கேசன்துறை வீதியில் உள்ள அரச மாளிகை மற்றும் அச்சுற்றாடலில் அழிக்கப்பட்ட சைவ ஆலய மடங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு திருமுருகன் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலை ஆதிசிவன் கோயில், சடையம்மா மடம், உச்சிப்பிள்ளையார் கோவில் போன்றவை இடிக்கப்பட்டு கட்டப்பட்ட இந்த மாளிகையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அல்லது இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும் என அந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 106 பரப்பு கொண்ட சைவ சமய நிறுவனத்தின் மடத்தை அழித்து ஹோட்டல் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிலத்தை சமய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியைக் கொலை செய்துவிட்டு தப்பியோடிய கணவன் மடக்கிப் பிடிப்பு

## யாழில் பொலிஸ் புலனாய்வாளர்கள் அதிரடி

யாழ்ப்பாணம் - நாவற்குழிப் பகுதியில் மனைவியைக் கொலை செய்து விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட கணவன் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை அதிரடியாக முன்னெடுக்கப்பட்டது.

நாவற்குழி, ஐயனார் கோயிலடியில் வசிக்கும் அஜந்தன் யமுனா என்கின்ற 23 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் கொலை செய்யப்பட்ட நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் வீட்டில் கணவனைக் காணாத நிலையில் பொலிஸாரின் சந்தேகம் வலுத்தது.

குடும்பத் தகராறில் கணவரால் அந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதிய பொலிஸார் கணவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் ஒட்டோவில் சந்தேகநபர் தப்பிக்க முற்பட்ட வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்ட நிலையில். "நான் மனைவியைத் தாக்கினேன். மனைவி உயிரிழந்தமை எனக்குத் தெரியாது"- என்று சந்தேகநபர் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காகச் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ, 01)

### இந்தியப் பிரதமர் பதில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துதான் இந்தியப் பிரதமருக்குத் தமிழ்க் கட்சிகள் அனுப்பிய கடிதம் சென்றடையவில்லை எனச் சொல்ல வேண்டி ஏற்பட்டது.

சிகிச்சை சுமந்திரனுக்கும் தேவைப்படலாம், எனக்கும் தேவையாக இருக்கலாம். நாங்கள் எல்லோரும் மனதால் பிரச்சினைப்பட்டவர்கள்தானே? ஆசிரியரும் மாணவரும் என நானும் சுமந்திரனும் இணைந்து சிகிச்சை பெறவேண்டிய அவசியம் இருக்கும் போலத் தெரிகிறது எனவும் அவர் தெரிவித்தார். (01)

### பெரும்போகத்தை ஆரம்பிக்கும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகரமான அறுவடையைப் பெற முடிந்தது.

இம்முறையும் பயிர்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அதற்குத் தேவையான உரங்களை அனுப்பி, விவசாயிகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி, இந்தப் போகத்தையும் வெற்றியுடன் முன்னெடுக்கவே எதிர்பார்க்கின்றோம்.

சென்றமுறை 800 மெற்றிக் தொன் அரிசியை நாட்டுக்குக் கொண்டு வர நேர்ந்தது.

என்றாலும் கடந்த பெரும்போக மற்றும் சிறுபோகப் பயிர்செய்கையை வெற்றிகரமாக முன்னெடுத்ததன் காரணமாக வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்பட்டாலும், நாட்டு மக்களுக்கு தேவையான அளவு அரிசி கிடைத்திருக்கிறது.

அரிசியை இறக்குமதி செய்யுமாறு பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனாலும் அவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

மக்களின் நுகர்வுக்குத் தேவையான அளவு அரிசி நாட்டில் உள்ளது, எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

### பாலஸ்தீன மக்களுக்கான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதோடு பாலஸ்தீன கூட்டொருமைப் பாட்டிற்கான இலங்கை செயற்குழுவின் ஸ்தாபகத் தலைவராகவும் அவர் செயற்பட்டிருந்தார்.

பாலஸ்தீனத்தை ஒரு தேசமாக 1988ஆம் ஆண்டு இலங்கை அங்கீகரித்தது என்பதும் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாலஸ்தீனத்தில் 'மஹிந்த ராஜபக்ச வீதி' என ஒரு வீதிக்கு பெயரிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

### பெற்றோலியக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், வெற்றிடங்களுக்கு வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிலையம் அகியவற்றின் தலைவர் மொஹமட் உவைஸ் தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

### யாழ் காங்கேசன்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தகவல் தொழிநுட்ப பல்கலைக்கழகமாக அபிவிருத்தி செய்யவுள்ளது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு இன்று பத்தரமுல்ல நகர அபிவிருத்தி அதிகார சபைக் கேட்போர் கூடத்தில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக, ஜனாதிபதி அலுவலகத்தின் தேசிய பாதுகாப்புப் பிரதம ஆலோசகரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதி மாளிகையை இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவகத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த ஜனாதிபதி மாளிகையின் நிர்மாணப் பணிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த ஜனாதிபதி மாளிகையை நிர்மாணிக்கும் போது புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்தன.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்த மாளிகை வளாகம் 30 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. அதில் 12 ஏக்கரில் இந்தக் கட்டிடத் தொகுதிகள் அமைந்துள்ளன.

அரசுக்குச் சொந்தமான 12 ஏக்கரை SLIIT நிறுவனத்திற்கு குத்தகைக்கு விட முதலில் முடிவு செய்யப்பட்டது. மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட எஞ்சிய 17 ஏக்கர் காணியை வருமானத்தின் அடிப்படையில் SLIIT நிறுவனத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் இந்த ஜனாதிபதி மாளிகையின் பணிகளை விரைவாக முடித்து, முழு அளவிலான தகவல் தொழிநுட்பப் பல்கலைக்கழகமாக மாற்ற முடியும் என நம்புகிறது. இந்தத் தகவல் தொழிநுட்பப் பல்கலைக்கழகம் northern Uni. IT பல்கலைக்கழகமாக உருவாக்கப்படும்.

ஆண்டுதோறும் சுமார் 1,500 மாணவர்களுக்கு தகவல் தொழிநுட்ப அறிவை வழங்கும் திறன் கொண்டதாக இது அமையவிருக்கிறது.

இந்தத் தகவல் தொழிநுட்பப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டதன் பின்னர், வடக்கிலிருந்து தகவல் தொழிநுட்பம் படிக்க கொழும்புக்கு வர வேண்டிய அவசியமில்லை.

இதன்படி 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாண பிள்ளைகளின் தகவல் தொழிநுட்ப அறிவு விருத்தியடைந்து, அவர்கள் தமது அறிவை பூரணப்படுத்த முடியுமாதலால் அவர்கள் எதிர்கால நவீன உலகிற்குப் பொருந்துவார்கள் என இலங்கைத் தகவல் தொழிநுட்ப நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல் தொழிநுட்பப் பல்கலைக்கழகம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அண்டை நாடான இந்தியாவைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்வி கற்க வாய்ப்பு அளிக்கப்படும், என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, தலைவர் இண்டி பத்மநாதன் மற்றும் இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் எல்.ரத்நாயக்க மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# நூலகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மாங்குளம் புகையிரத நிலையத்தில் அமைப்பு






முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகர் பகுதியில் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் நூலகம் உள்ளிட்ட இதர வசதிகள் இல்லாத நிலைமை தொடர்ச்சியாகக் காணப்பட்டு வந்தது

இந்நிலையில், பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் மாங்குளம் புகையிரத நிலையத்தினர் தொடர்பு கொண்டு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பல தரப்பினரிடம் இருந்தும் உதவிக்கரம் நீட்டப்பட்டு, பல்வேறு விதமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புகையிரத நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு, அழகுபடுத்தல் வேலைகளும் மர நடுகைத் திட்டங்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக நேற்றும் சில நலத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

B .B .K நிறுவனத்தினருடைய அனுசரணையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் நூலகத்திற்கான அலுமாரி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட நிலையில், சிறகுகள் அமைப்பினர் உள்ளிட்ட தரப்பினரால் இந்த நூலகத்திற்கான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. அத்துடன், கிரீன் லேயர் அமைப்பினால் புகையிரத நிலைய வளாகத்தில் 50 பயன் தரும் மரக்கன்றுகள் நாட்டி வைக்கின்ற நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

புகையிரத நிலைய அதிபர் க.கலைவேந்தனின் கோரிக்கையின் பேரில் முன்னெடுக்கப்படும் இந்த நலத் திட்டங்களில், நேற்று புகையிரத நிலைய அதிபர் க.சுதர்னின் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், யாழ் புகையிரத நிலைய அத்தியட்சகர் சுரேந்திரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், மருத்துவர்.க. உதயசீலன், டீ .டீ .மு.கணக்காய்வு நிறுவனத்தின் வவுனியா கிளை முகாமையாளர் சஜிந்தன், கிரீன் லேயர் அமைப்பின் பணிப்பாளர் சசிக்குமார், சிறகுகள் அமைப்பின் சுஜீவன், புகையிரத நிலைய அதிபர் சி.அனுசியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (04)

# இராமகிருஷ்ண மிஷன் மடத்தில் நவராத்திரி



(வி.ரி. சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரமத்தில் நவராத்திரி பூசைகள் ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கொலு பொம்மைகள் அங்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளதோடு, சப்தமி தினத்தன்று அபிராமி அந்தாதி பாராயணமும் நடைபெறவுள்ளது.

அஷ்டமி தினமாகிய ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் விசேட பூசைகள் நடைபெற்று, அன்று மாலை நலங்களைச் சேர்க்கும் திருவிளக்குப் பூசையும் இடம்பெறவுள்ளது.

நவமி தினமாகிய திங்கட்கிழமை மாலை லலிதா சகஸ்ரநாம பாராயணம் நடைபெறும்.

வழமை போல தசமி தினத் தன்று மாணவர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.




# கட்டான மோட்டர்ஸ் கார் பந்தயத் தொடரில் நிப்பொன் பெயின்ட் அணியினருக்கு வெற்றி

கட்டான மோட்டர்ஸ்போர்ட்ஸ் கழகத்தினால் நடத்தப்பட்ட Xtreme Autocross Round 2 கார் பந்தயத்தில் நிப்பொன் பெயின்ட் அணியின் உஷன் பெரேராவும் அணியினரும் வெற்றிபெற்றிருந்தனர்.

பட்டலகம கார் பந்தயத் திடலில் நேற்றைய தினம் நடைபெற்ற இந்தப் போட்டிகளுக்கு நிப்பொன் பெயின்ட் லங்கா அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 27 மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவித்திட நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 27 மீனவர்களையும் கைப்பற்றப்பட்டுள்ள அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து தமிழ்நாட்டு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், இருவேறு சம்பவங்களில் 27 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம் தியதியன்று 4 மீன்பிடிப் படகுகளில் சென்ற ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களும், மற்றொரு சம்பவத்தில் விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல, தொடர்ச்சியாக இதுபோன்று மீனவர்கள் கைது செய்யப்படுட, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் மீனவ மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள மீனவர்கள் கைது செய்யப்படுவதால், மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்களால் மீனவ சமுதாயக் குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, உடனடியாக தூதரக அளவிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசை வலியுறுத்திட உரிய நடவடிக்கைகளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## ஹமாஸ் தாக்குதலுக்கு ரிஷி சுனக் கண்டனம்



இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதப் படையினர் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது என பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை விவரிக்க வார்த்தைகளே இல்லை. முதியோர்கள், சிறுவர்கள், சிறுமிகள், ஆண்கள், பெண்கள் எனப் பலரும் பாரபட்சமில்லாமல் ஹமாஸ் படையினரால் பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இனிவரும் வாரங்களில் இதைவிட கடினமான சூழ்நிலைகளை இஸ்ரேலிய மக்கள் சந்திக்க நேரிடும். இந்த இக்கட்டான சூழலில் பிரிட்டன் உங்களுக்கு உறுதுணையாக நிற்கும். தங்களைப் பாதுகாத்துக்கொள்ள எவ்விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது. அதற்கு பிரிட்டனும் உதவத் தயாராக உள்ளது.

போரில் உயிரிழந்த பிரிட்டன் நாட்டுக் குடிமக்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரிட்டனில் வசிக்கின்ற யூதர்களுக்கு எதிராக இணையம் வாயிலாகவும், தெருக்களில் நடக்கின்ற போராட்டங்கள் மூலமாகவும் பரப்பப்படும் வெறுப்புணர்வு உங்களைக் காயப்படுத்தும் என்பதை நான் உணர்வேன். இஸ்ரேலில் உள்ள யூதர்களுக்கும், பிரிட்டனில் உள்ள யூத சமுதாயத்துக்கும் எப்போதும் பாதுகாப்பளிப்பேன், எனக் கூறியுள்ளார். (04)

## காசாவிலிருந்து மக்கள் வெளியேறுவதை ஹமாஸ் அமைப்பினர் தடுக்கின்றனர்!

### ஆதாரத்தை வெளியிட்டது இஸ்ரேல்

காசாவில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதை ஹமாஸ் அமைப்பினர் தடுப்பதாக இஸ்ரேல் ராணுவம் குற்றஞ்சாட்டி உள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்கியதைத் தொடர்ந்து, காசா நகரில் அவர்களின் பதுங்குமிடங்களைக் குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

அந்நகரில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என இஸ்ரேல் அரசு உத்தரவிட்டது. அதனையடுத்து, அங்கு வசிக்கும் பெரும்பாலானோர் காசாவின் தெற்குப் பகுதிக்கு செல்லத் துவங்கியுள்ளனர்.

இதற்கான காலக்கெடுவை இஸ்ரேல் ராணுவம் நீடித்துள்ளது. அந்நாட்டு நேரப்படி காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, மக்கள் செல்லும் வழிகளில் தாக்குதல் நடத்த மாட்டோம் என்றும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மக்கள் வெளியேற வேண்டும், என்றும் ஹமாஸ் பயங்கரவாதிகள் ஏற்கனவே அவர்களின் குடும்பத்தைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்று விட்டனர் எனவும் அது தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காசா நகரில் இருந்து, பாதுகாப்பிற்காக வெளியேறும் பொதுமக்களை ஹமாஸ் பயங்கரவாதிகள் தடுத்து நிறுத்துவதாக குற்றஞ்சாட்டியுள்ள இஸ்ரேல் ராணுவம், தங்களின் பாதுகாப்புக் கேடயமாக பொதுமக்களைப் பயங்கரவாதிகள் பயன்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது. இதற்கான காணொளி ஆதாரங்களையும் அது வெளியிட்டுள்ளது. (04)



## பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும்! ஹமாஸுக்கு போப் பிரான்சிஸ் கோரிக்கை

இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டுமென்று ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கு போப் பிரான்சிஸ் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஸாவில் இருந்து கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஆயிரக்கணக்கான ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேலுக்குள் புகுந்து பலரைப் பிணைக் கைதிகளாகவும் பிடித்துச் சென்றனர்.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திவரும் பதில் தாக்குதல்களில் பிணைக் கைதிகளில் பத்திற்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டதாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிணைக் கைதிகளை விடுவிக்குமாறு ஹமாஸுக்கு போப் பிரான்சிஸ் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், 'போரில் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் மற்றும் குடிமக்கள் தாக்கப்படக் கூடாது என்பதை உறுதியாக வலியுறுத்துகிறேன். மனித உரிமைகள் சார்ந்த சட்டங்கள் கண்டிப்பாக மதிக்கப்பட வேண்டும். முக்கியமாக காஸாவில் உள்ள குடிமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.



ஹமாஸ் அமைப்பினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ள பிணைக் கைதிகளை அவர்கள் பாதுகாப்பாக விடுவிக்க வேண்டும். உலகின் எந்த மூலையிலும் அப்பாவி மக்கள் இரத்தம் சிந்தக் கூடாது. போர் என்பது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும், என்று கூறியுள்ளார். (04)

## இஸ்ரேலைத் தாக்குவதற்கு ஆயுதங்களை வழங்கவில்லை! - வட கொரியா விளக்கம்

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு வட கொரியாவின் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக அமெரிக்கா அரசுக்கு ஆதரவான பத்திரிகை அமைப்புகள் ஆதாரமற்ற, பொய்யான வதந்தியைப் பரப்புகின்றனர், என வடகொரியா விளக்கம் அளித்துள்ளது. இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலில் ஹமாஸ் படையினர் வடகொரிய ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி இருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், வடகொரியாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், அமெரிக்க அரசுக்கு ஆதரவான பத்திரிகை அமைப்புகள் மற்றும் அரைகுறை வல்லுநர்கள் இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு வடகொரியாவின் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டி உள்ளனர். அவர்கள் ஆதாரமற்ற, பொய்யான வதந்தியைப் பரப்புகின்றனர், என்று கூறப்பட்டுள்ளது. (04)

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு 2 சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள்

## தொழிலதிபர் எம்.பி. தௌசீத் வழங்கினார்



(சியாத் எம்.இஸ்மாயில் )

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் எம்.பி. தௌசீதினால் மேற்படி சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் மற்றும் ஹீமோடையாலி ஸிற்கான போர்ட்டபிள் ஆர்ஓ ஆகியன வைத் தியசாலைக்கு அன்ப ளிப்புச் செய்யப்பட்டன.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். றஜாப் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ் வில், சிறுநீரக விசேட வைத்திய நிபுணர் டொக்டர். நயோமி வடுவகே, வைத்தி யசாலைக் குழுத் தலைவர் பொறியியலாளர் வை.பி.சமட், சிறுநீரக சுத்தி கரிப்புப் பிரிவு மற்றும் சுகாதார தரப் பாதுகாப்புப் பதில் பொறுப்பு வைத்தியர் எம்.எச்.எம்.சனூபர், திட்டமிடல் பதில் பொறுப்பு வைத்தியர் எம்.எம்.தாஸிம், வைத்திய நிபுணர்களான றிப்ஷான் ஜெமீல், ஐ.எல்.மாஹில், இன்பாக் லுதுப்டீன் ஆகியோரோடு அரச மருத்துவ அதிகாரிகள் கிளைச் சங்கத்தின் செயலாளர் டொக்டர். ஏ.சீ. அப்துல் றசாக், தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர், வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை குழு உறுப்பி னர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குருதிச் சுத்திகரிப்பு, சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகளோடு, நீண்ட காலமாக சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளர்களின் பிரச்சினைகளுக்கும் இங்கு சிகிச் சையளிக்கப்பட்டு வருகின்றது. சிறுநீரக நோயாளர்கள் தூர இடங்களுக்குச் சென்று அலைந்து திரிந்து கால விரயம், பணச் செலவு போன்ற அசௌகரியங்களை எதிர்கொள்ளாது, இங்கேயே வைத்திய சேவைகளைப் பெற்று நன்மையடையுமாறு கிழக்குக் கரையோரப் பிராந்திய மக்களை வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் கேட்டுக்கொண்டார்.

சிறுநீரக கிளினிக்கானது, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒவ்வொரு மாதமும், முதல் வாரத் தின் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெற்று வருகின்றது.

சிறுநீரகச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்தமையினை நினைவுகூர்ந்து, வைத்திய குழுமத் தினால் ஞாபகச்சின்னம் வழங்கிவைக்கப்பட்டது.

# அபிவிருத்திப் போர்வையில் தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

இலங்கையின் தொல்பொருள் பாரம்பரியத்தைப் பாது காக்கும் சட்டபூர்வ அதிகாரமும் பொறுப்பும் கொண்ட தொல்பொருள் திணைக்களமும் அதன் கீழ் இயங்கும் மத்திய கலாசார நிதியம் உட்பட ஏனைய நிறுவனங்களும் தமது கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளன. அண் மைக்காலமாக தொல்பொருள் பாரம்பரியத்தின் மீது மேற் கொள்ளப்பட்டு வருகின்ற தேவையற்ற அழுத்தங்கள் மற் றும் அச்சுறுத்தல்கள் காரணமாகவே இவ்வாறு பொறுப் புக்கள் தட்டிக் கழிக்கப்பட்டுள்ளன, என்று இலங்கை தொல்பொருள் ஆய்வாளர்கள் சபை அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

தொல்பொருள் ஆவணப்படுத்தல் பட்டியலின்படி பாதுகாக் கப்பட வேண்டிய பல நினைவுச் சின்னங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்ற போர்வையில் இடிக்கப்படுவதற்கு அல்லது அழிக்கப்படுவதற்கும், மத நோக்கங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கப்படுவதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு பொருளாதார அல்லது அரசியல் ஸ்திரமற்ற நிலையிலும் இவ்வாறான அழிவுகளை அனுமதிக்கும் நாடு உலகில் வேறு எங்கும் கிடையாது எனவும், இத்த கைய நிலையில் நாட்டின் தொல்பொருள் பாரம்பரியத்தை எவ்வகையிலும் மீளக் கட்டியெழுப்ப முடியாது எனவும், இத்தகைய நடவடிக்கைகளுக்கு இடமளிக்கும் அரசியல் அல்லது மத நிறுவனங்களே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் தொல்பொருள் ஆய்வாளர்கள் சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தலுக்கான தொல் பொருள் ஆய்வாளர்கள் சபையின் தலைவரான தொல்லி யல் ஆய்வாளர் கலாநிதி பொஹிங்கமுவ மற்றும் இணைச் செயலாளர் தொல்பொருள் ஆய்வாளர் சுஜாதா பெரேரா ஆகியோர் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர். (ரெ-04)




# கல்முனை சுகாதாரப் பணிமனையில் இளைஞருக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு





(நூருல் ஹுதா உமர்)

மனித மேம்பாட்டு அமைப்பு - ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டிலும் கல்முனைப் பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பி லும் "இளைஞர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரச் சவால்கள்" எனும் தொனிப்பொருளிலான விழிப் புணர்வுச் செயலமர்வு கல்முனைச் சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்காவின் பணிப்பாளர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லமினால் ஆரம்பம் செய்யப்பட்ட இந்நிகழ்வில், பிரதம அதிதி யாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஐ. எல். எம். றிபாஸ் கலந்துகொண்டு, செயலமர்வின் விரிவுரை களையும் நடாத்தினார்.

குறிப்பாக இளைஞர்களின் மனப்பாங்கு, இளை ஞர்கள் எதிர் கொள்ளும் சவால்கள், அவற்றை எதிர்கொள்ளும் யுக்திகள் போன்ற விடயங்களை அவர் முன்வைத்தார்.

நிகழ்வின் பிரதான வளவாளராக கல்முனைப் பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர். எம்.என். எம்.தில்ஷான் கலந்துகொண்டு, தற்காலத்தில் இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற சுகாதா ரச் சவால்கள் மற்றும் முறையற்ற நடத்தைகள் குறித்தும், அவற்றை எதிர்கொள்ள வேண்டிய முறைகள் குறித்தும் விளக்கினார்.

குறிப்பாக சமகாலத்தில் இலங்கையில் அதி கரித்துவரும் எச்.ஐ.வி தொற்றுக் குறித்தும், அதிலிருந்து தற்காத்துக் கொள்வது குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

செயலமர்வில் பங்குபற்றிய இளைஞர், யுவதி களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளரினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





# அட்டாளைச்சேனை பாடசாலை அதிபர்களுக்கு சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டச் செயலமர்வு

(கே.எ.ஹமீட்)

அட்டாளைச்சேனை கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டச் செயலமர்வுக் கருத்தரங்கு இன்று அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக் காரியாலயக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை கோட்டக்கல்வி அதிகாரி எம்.எச்.எம். றஷ்மி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம். இஸ்ஸதீன் கலந்து கொண்டு "சுக வாழ்வும் மகிழ்வான மனதும்" என்ற தலைப்பில் அதிபர்களுக்கான விளக்க உரையை நிகழ்த்தினார்.

இப்பிரதேசத்திற்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடிய கும்பல்

## கைதுசெய்ய நீதிமன்று உத்தரவு



யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்து, அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக பிறந்தநாள் கொண்டாடிய கும்பலைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த 150க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்று கூடி, தங்களில் ஒருவரின் பிறந்தநாளை கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளனர்.

அதனை டிக்டொக் போன்ற சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தும் உள்ளனர்.

பிறந்தநாள் கொண்டாடிய இளைஞர்களின் செயற்பாடானது, வீதியில் சென்ற மற்றும் பேருந்து நிலையத்தில் இருந்தவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக இருந்ததாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்ட போதிலும் பொலிஸார் அது தொடர்பில் உடனடி நடவடிக்கையை எடுக்கவில்லை.

யாழ்.நகர் மத்தியில், சன நெருக்கடியான நேரத்தில் சட்டவிரோதமான முறையில் ஒன்று கூடி பிறந்தநாள் கொண்டாடியுள்ள நிலையில், அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதமை தொடர்பாகப் பலரும் விசனம் தெரிவித்து இருந்தனர்.

அதனையடுத்து, சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடிப் பிறந்தநாள் கொண்டாடி, மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ், கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இது தொடர்பாக இருவரைக் கைது செய்து கடந்த சனிக்கிழமை நீதவான் முன்னிலையில் முற்படுத்தியிருந்தனர்.

அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், சம்பவத்துடன் தொடர்புடைய பிறந்தநாள் கொண்டாடிய நபர் உள்ளிட்ட அனைவரையும் கைதுசெய்து முற்படுத்தவேண்டும் எனப் பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

அதனையடுத்து பொலிஸார் அனைவரையும் கைது செய்வதற்கு தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (01)

# இரத்தினங்கள் மற்றும் ஆபரணக் கண்காட்சி FACETS Sri Lanka – ஜனவரியில் கொழும்பில்

கொழும்பு, ஒக்.16

இலங்கை இரத்தினங்கள் மற்றும் ஆபரணச் சங்கம், தேசிய இரத்தினங்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சியான FACETS Sri Lanka கண்காட்சி 2024 ஜனவரி 6 முதல் 8 வரை கொழும்பில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணச் சங்கம் இலங்கையில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத் துறையில் முன்னணி வகிக்கும் ஓர் அமைப்பாகும்.

இத்துறை சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளின் அனைத்து அம்சங்களையும் இந்த அமைப்பு பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணச் சங்கத்தின் மேற்படி FACETS கண்காட்சியானது இம்முறையும் உலகில் முன்னணி வகிக்கும் பெரிய அளவிலான மற்றும் சிறிய அளவிலான வர்த்தகத்துறையிலுள்ள இரத்தினக்கல் தொழிநுட்ப வல்லுநர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களை ஈர்க்கும் விதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ரெ-05)

# கல்முனை மாநகர சபையினால் மணற்சேனை மயானம் துப்புரவு



(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மணற்சேனை மயானத்தை துப்புரவு செய்யும் வேலைத் திட்டம் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட காலமாகத் துப்பரவு செய்யப்படாமல் பற்றைக் காடாக காணப்பட்ட இம்மயானமானது, மாநகர சபை ஊழியர்களினால் மிகவும் அர்ப்பணிப்புடன் துப்புரவு செய்யப்பட்டு, கழிவுகள் யாவும் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

மாநகர சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், எம்.எம்.நிஸார் மற்றும் மேற்பார்வையாளர்கள் இணைந்து இந்தத் துப்புரவுப் பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

இதற்கு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வி.சந்திரன் உள்ளிட்ட குழுவினரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியினால் விசேட கருத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ள கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாடு - எனும் திட்டத்தின் கீழ், உள்ளூராட்சி வாரம் பிரகடனம் செய்யப்பட்டு, நாள்தோறும் ஒவ்வொரு மையவாடியைத் துப்புரவு செய்யும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத் திட்டம், கல்முனை தமிழ்ப் பிரிவு இந்து மயானத்தில் ஆரம்பிக்கப்பட்டு, கல்முனைக்குடியில் நூராணியா மையவாடி, மருதமுனையில் அக்பர் மையவாடி, சாய்ந்தமருதில் தக்வா மையவாடி என்பனவும் சிறந்த முறையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

# வேகமாக பரவி வரும் கண் நோய்க்கு கை வைத்தியம் செய்ய வேண்டாம்!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரொஷான் குமார

இந்நாட்களில் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை கண் நோய் வேகமாகப் பரவி வருகிறது. இந்நோயைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்க வேண்டும், என இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரொஷான் குமார தெரிவித்துள்ளார்.

கண் நோய் ஏற்பட்டவர்களுக்கு கண்களில் வலி, கண்களைத் திறப்பதில் சிரமம், கண்ணீர், பூளை வடிதல் மற்றும் ஒளியைப் பார்க்கும்போது கண்களில் அசௌகரியம் ஆகியன ஏற்படலாம். நோயின் ஆரம்பக் கட்டத்தில் கண் அரிப்பு போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

நோயுற்ற ஒருவரது கண்களை ஆரோக்கியமான ஒருவர் நேரடியாக நோக்குவதன் மூலமும் இந்நோய் பரவலாம். குறிப்பாக இதில் பாடசாலை மாணவர்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். கைகளைச் சவர்க்காரமிட்டு கழுவுவதுடன், நோயாளிகளைத் தொடுவதைத் தவிர்க்கவும் வேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அதுமட்டுமின்றி, முடிந்தவரை சனிட்டைசர் பயன்படுத்திக் கைகளைச் சுத்தம் செய்வது முக்கியம். அறிகுறிகள் தொடர்ந்தால் மருத்துவ ஆலோசனையைப் பெறுவது சிறந்தது. கைமருத்துவம் செய்வதை தவிர்த்தல் வேண்டும். மேலும், இந்நோய்ப் பாதிப்பு ஏற்பட்டிருப்பின் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்ப்பது நல்லது எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர் ரொஷான் குமார மேலும் குறிப்பிட்டார். (ரெ-06)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
GET IT ON
Google Play
Download on the
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# சம்பள அதிகரிப்புக் கோரிக்கை முன்வைத்து முந்தல் பிரதேச செயலகத்தினர் ஆர்ப்பாட்டம்

2024 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தையும் 20,000 ரூபாவினால் அதிகரிக்க கோரி முந்தல் பிரதேச செயலக ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் முந்தல் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நண்பகல் முதல் பகல் ஒரு மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை 20,000 த்தால் அதிகரியுங்கள்!, எரிபொருள், சமையல் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட பொருட்களின் விலைகளைக் குறையுங்கள்!, பொருட்களுக்கு விலைகளை அதிகரிக்கும்போது அரச ஊழியர்களையும் கவனத்தில் கொள்ளுங்கள்!, என்பவை போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் அரச உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2023இல் வெளியிடப்பெற்றது.